# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.44 /2015**

திரு. I. செல்வம்,
த/பெ ஐயந்துரை,
வெள்ளாள பாளையம்,
காவேரிப்பட்டி அஞ்சல்,
தேவூரி வழி, சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 104. ........மேல் முறையீட்டாளர்
(திரு. I. செல்வம்)

எதிர்

1) தலைமை பொறியாளர்,
ஈரோடு மண்டலம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
498 ஈ.வி.என். சாலை, ஈரோடு – 638 009

2) மேற்பார்வை பொறியாளர்,
மேட்டூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மேட்டூர் அணை – 636 401

3) மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மண்டலம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
498 ஈ.வி.என். சாலை,
ஈரோடு – 638 009 .........எதிர்மனுதாரர்கள்
(திரு. K. சீனிவாசன், செயற்பொறியாளர்/சங்ககிரி)

**கேட்புரை நாள்: 18–8–2015**

**ஆணை நாள் : 20–8–2015**

1. திரு. I. செல்வம், த/பெ ஐயந்துரை வெள்ளாள பாளையம், அவர்களின் 8.5.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.44/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட மனுவில், மேல்முறையீட்டாளர் சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம் கோனேரிப்பட்டி கிராமம் விவசாய மின் இணைப்பு எண்.1111 முறைகேடாக சர்வே எண்.209/10இல் பெறப்பட்டுள்ளது என்றும், ஆனால், அந்த மின் இணைப்பை எந்த சட்ட அடிப்படையில் வைத்துக் கொள்ள உத்தரவு இடப்பட்டுள்ளது என்று தெரிந்து கொள்ள வேண்டும் எனறு கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு பதிலுரை வழங்கும்படி 20.5.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. எதிர்மனுதாரர்–2 மேற்பார்வை பொறியாளர், மேட்டூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய பதிலுரையை அவரின் 11.6.2015 நாளிட்ட கடிதத்தில் சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 18.8.2015 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6. எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையில் திரு. பொன்னுசித்தன், த/பெ திருமலை கவுண்டர் அவர்கள் மேற்கண்ட விவசாய மின் இணைப்பு எண்.1111, வெள்ளாள பாளையம் பகிர்மானத்தை மின் துண்டிப்பு செய்ய வேண்டும் என்று மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் W.P.No.20914/2013ல் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அந்த வழக்கு நிலுவையிலுள்ளது என்ற தகவலையும் தெரிவித்துள்ளார்.

7. மேல்முறையீட்டாளரும் அந்த வழக்கு இன்றுவரை நிலுவையில்தான் உள்ளது என்றும், முடிவுக்கு வரவில்லை என்றும் கேட்புரை நாளில் தெரிவித்துள்ளார்.

8. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு எண்.1111 தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டு பெறப்பட்டுள்ளதால் அதை மின்துண்டிப்பு செய்யவேண்டும் என்று திரு.பொன்னுசித்தன் அவர்கள் மதராஸ் உயர்நீதிமன்றத்தில் W.P.No.20914/2013ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு நிலுவையிலுள்ளதால் இதுகுறித்து மின் நுகர்வோர்

குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"17. xxx xxx xxx*

*xxx xxx xxx*

*(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்தமுறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள்_ பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல்விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது."*

9. மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டிலுள்ள புகார் சம்பந்தமான வழக்கு நீதிமன்ற நடவடிக்கையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கெனவே கட்டளையோ தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின் குறைதீர்ப்பாளர் ஏற்க முடியாது என்று தெரிகிறது.

10. இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மின் இணைப்பு எண்.1111 எண் முறைகேடாக சர்வே எண்.209/10ல் உள்ள கிணற்றில் பெறப்பட்டுள்ளது என்றும், ஆனால், உரிமம்தாரர் அந்த மின் இணைப்பை மின்துண்டிப்பு செய்யாமல் வைத்து கொள்வது எந்த சட்டத்தின் அடிப்படையில் என்று தெரிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். அதாவது முறைகேடாக பெறப்பட்ட மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் இல்லையெனில் எந்த சட்டத்தின் அடிப்படையில் அது முறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதுதான் கோரிக்கை,

ஆனால், மேற்கண்ட மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்யவேண்டும் என்று திரு. பொன்னுசித்தன் அவர்கள் தாக்கல் செய்த வழக்கு எண்.20914/2013 உயர்நீதிமன்றதில் நிலுவையிலுள்ளது என்பதால், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின் சம்பந்தப்பட்ட பொருள் பற்றி வழக்கு ஒன்று உயர்நீதிமன்றத்தின் விசாரணை நிலையில் உள்ளது என்று தெரிகிறது. எனவே, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி17(4)(ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

11. மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.44/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்

**1)** திரு. I. செல்வம்,
த/பெ ஐயந்துரை,
வெள்ளாள பாளையம்,
காவேரிப்பட்டி அஞ்சல்,
தேவூரி வழி, சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 104.

**2)** தலைமை பொறியாளர்,
ஈரோடு மண்டலம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
498 ஈ.வி.என். சாலை, ஈரோடு – 638 009

**3)** மேற்பார்வை பொறியாளர்,
மேட்டூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மேட்டூர் அணை – 636 401

**4)** மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மண்டலம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
498 ஈ.வி.என். சாலை,
ஈரோடு – 638 009

5) தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,  சென்னை – 600 008.

7)  உதவி இயக்குநர் (கணினி)  –    மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.